3004/மஅதி2/17

(1)

27

சுருக்கம்

வாகனம்–மதுரை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநரின் பயன்பாட்டிலிருந்த கழிவு நீக்கம் செய்யப்பட்ட ஈப்பு எண்.TN-U-654–க்கு பதிலாக புதிய வாகனம் வாங்கிட அனுமதி வழங்குதல்–ஆணை வெளியிடப்படுகிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ம.அதி.2) துறை

அரசாணை(ப) எண்.290

நாள்: 28.06.2018

படிக்கப்பட்டவை:

1. இந்திய அரசு, ஊரக வளர்ச்சி அமைச்சகக் கடித எண்.R-20015/32/2004 - மாஊவமு, நாள் 03.01.2005.
2. மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர்/பெருந்தலைவர் அவர்களின் கடிதம் ந.க. எண்.டி10/911/2014, நாள் 24.12.2014.
3. அரசாணை(நிலை) எண்.232, உள்(போக்குவரத்து–4) துறை, நாள் 15.03.2017.
4. மதுரை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கூடுதல் ஆட்சியர்(வ)/திட்ட இயக்குநரின் கடிதங்கள் ந.க. எண்.டி10/911/2014, நாள் 30.10.2017 மற்றும் 23.4.2018.
5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதங்கள் ந.க.எண்.3931/2015/ஜி2, நாள் 13.3.2018 மற்றும் 18.5.2018.

ஆணை:

மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர்/பெருந்தலைவர் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மதுரை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் திட்ட இயக்குநரின் பயன்பாட்டில் இருந்த ஈப்பு எண்.TN-U-654, இயக்குநர், மோட்டார் வாகன பராமரிப்புத் துறை, சென்னை அவர்களின் நடவடிக்கைகள் எண்.H1/9711/2014, நாள் 20.10.2014ன்படி கழிவு நீக்கம் செய்யப்பட்டதால் 24.10.2017 அன்று ஏலமிடப்பட்டு, ஏலத் தொகை ரூ.9,000/– + GST 12% ரூ.1,080/– ஆக மொத்தம் ரூ.10,080/– அன்றே மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நிர்வாக கணக்குத் தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது. மதுரை மாவட்டத்தில் உள்ள 420 ஊராட்சிகளிலும் நடைபெற்றுவரும் வளர்ச்சிப் பணிகளுடன் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணிகளையும் பார்வையிட வேண்டியிருப்பதால் ஈப்பு எண்.TN-U-654க்கு பதிலாக புதிய வாகனம் வாங்குவதற்கு அரசின் அனுமதி பெற்று தரும்படி மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

...2

Verified RealEstate TM

2. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளுக்கு புதிய வாகனம் வாங்குவது குறித்த அதிகாரத்தை மாநில அரசுச் செயலாளர்களுக்கு வழங்கியுள்ள மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் கடிதத்தில் கீழ்க்காணும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன:-

(1) மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் புதிய வாகனங்களை வாங்குவதற்கு ஆகும் செலவினை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் நிர்வாக செலவுத் தொகையில் சில்லரைச் செலவு நிதிக்காக ஒதுக்கீடு செய்யப்படும் 30% நிதியிலிருந்து மேற்கொள்ள வேண்டும். இதற்குமேல் செலவு ஏற்படும் இனங்களில் மாநில அரசே செலவினை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

(2) மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் நிர்வாகக் குழு (Governing Body) புதிய வாகனம் வாங்குவதற்கு உரிய ஒப்புதலை அளிக்க வேண்டும்.

(3) பழைய வாகனத்தைக் கழிவு செய்ய அதிகாரமுடைய அலுவலரின் (மாநில மோட்டார் வாகன பராமரிப்புத் துறை இயக்குநர்) சான்றிதழ் (Certificate of condemnation of old vehicle) செயற்குறிப்புடன் அனுப்பப்பட வேண்டும்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மோட்டார் வாகன பராமரிப்புத் துறை இயக்குநரின் 20.10.2014ம் நாளிட்ட செயல்முறை நடவடிக்கையில் ஈப்பு எண்.TN-U-654 கழிவு நீக்கம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது என்றும், புதிய சீருந்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் நிர்வாக நிதியில் 30% சில்லரைச் செலவினத்திற்காக ஒதுக்கப்படும் நிதியிலிருந்து மட்டுமே வாங்கப்படும் என்றும், புதிய வாகனம் வாங்கிட மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் 29.11.2014 அன்று நடைபெற்ற ஆட்சி மன்ற குழுக் கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது என்றும் மதுரை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கூடுதல் ஆட்சியர்(வ)/திட்ட இயக்குநர் சான்றளித்துள்ளார். எனவே, மதுரை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் அவர்களின் பயன்பாட்டில் இருந்த வாகனம் எண்.TN-U-654 கழிவு நீக்கம் செய்யப்பட்டதற்கு பதிலாக புதிய வாகனமாக ரூ.6,99,999/– மதிப்பீட்டில் Mahindra TUV 300 T4 வாங்க அனுமதி வழங்கிடக் கோரி கருத்துருவினை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசுக்கு அனுப்பியுள்ளார்.

4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக ஆய்வு செய்தது. ஆய்விற்குப்பின் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவினை ஏற்று மதுரை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் அவர்களின் பயன்பாட்டில் இருந்த வாகனம் எண்.TN-U-654 கழிவு நீக்கம் செய்யப்பட்டதற்கு பதிலாக புதிய வாகனமாக ரூ.6,99,999/– மதிப்பீட்டில் Mahindra TUV 300 T4 வாங்க மாவட்ட ஆட்சித் தலைவர்/பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மதுரை மாவட்டம்

...3

அவர்களுக்கு கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது:-

(i) புதிய வாகனம் வாங்குவது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நிர்வாக நிதி (DRDA–Admin Fund) சில்லரை செலவினத் தொகையின் 30% ஒதுக்கீட்டில் மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும். கூடுதல் நிதி ஏதும் மாநில அரசு நிதியிலிருந்து வழங்கப்படமாட்டாது; மற்றும்

(ii) Tamil Nadu Transparency in Tender Act/Government E-Marketplace (GeM) விதிகளை பின்பற்றி புதிய வாகனம் வாங்கப்பட வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஹன்ஸ் ராஜ் வர்மா,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை – 15.
மாவட்ட ஆட்சித் தலைவர் / பெருந்தலைவர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மதுரை மாவட்டம்.
மாவட்ட கூடுதல் ஆட்சியர்(வளர்ச்சி)/திட்ட இயக்குநர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மதுரை.
முதன்மை கணக்காயர், சென்னை–6/18/35.

நகல்
நிதி (ஊ.வ) துறை, சென்னை – 9.
உதிரி / இருப்பு கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

28/6/2018
பிரிவு அலுவலர்
28.6.18

Verified by RealEstate ™